**போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்றிட்டம் - 2018**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து மேலாண்மை செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி 5788–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பிரிவு 11, பொது நிபந்தனைகள் பீ(3) மற்றும் 4.09(பீ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. சொத்து முகாமைக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை அதிகரித்தல் மற்றும் பைலட் முகாமைத்துவ கோட்பாட்டிற்கான வெளியீடு மற்றும் செயல்திறன் சார்ந்த சாலை ஒப்பந்த முறைமையை பயன்படுத்தி வடிவமைத்தல் - நிர்மாணித்தல்-பராமரித்தல் முறையிலான ஒப்பந்தத்தின் முன்னோடி செயற்திட்டமாக பேலியகொடயில் இருந்து புத்தளம் வரையான வீதியில் தெரிவு செய்யப்பட்ட 58 கிலோமீற்றர்கள் ஜா-எல – சிலாபம் வரையான வீதி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் சொத்து முகாமைத்துவத்திற்கான நிறுவன ரீதியான வலுப்படுத்தல் மற்றும் இயளலவு மேம்படுத்தல் எம் பெயலுடய 2 மூலக் கூறுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா. 18,125 மில்லியனிற்கு சமமான (எஸ்.டி.ஆர் 90.5) மில்லியன் ஐ.அ.டொலர் 125 மில்லியன சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. இருப்பினும், 2018 ஒகஸ்ட் 15 இன் அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்ப வேலைப்பரப்பானது மாற்றியமைக்கப்பட்டிருந்தது. ஆரம்ப கடன் ஒதுக்கீடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 14,500 மில்லியனுக்குச் சொந்தமான ஐ.அ.டொலர் 100 வேலைகள் செயற்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 ஜூன் 30 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 ஒகஸ்ட் 15 இல் மீள்கட்டமைக்கப்பட்டு 2026 ஜூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

----------------------

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 பௌதீக செயலாற்றல்

### 2.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | சொத்து முகாமை மீதான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை அதிகரித்தல் மற்றும் வெளியீடு மற்றும் செயல்திறன் சார்ந்த சாலை ஒப்பந்த முறைமையை பயன்படுத்தி வடிவமைத்தல்-நிர்மாணித்தல் - பராமரித்தல் முறையிலான ஒப்பந்தத்தின் முன்னோடி செயற்திட்டமான வீதி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். ஆகையால் பெலியகொட - புத்தளம் வீதியின் ஜா-எல தொடக்கம் சிலாபம் வரையான பகுதிகளின் பராமரிப்பிற்காக பைலட் செயன்முறைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டத்தின் வேலையின் பரப்பானது செயற்திட்டத்தினால் 2018 திசெம்பர் 31 வரை காணி கொள்வனவு, நில அளவை, வேலையின் வடிவமைப்பு | 2018 ஒகஸ்ட் 15 இல் ஒப்பந்தமானது கைவிடப்பட்டு செயற்திட்டமானது மீள்கட்டமைக்கப்பட்டதன் காரணமாக ஜா-எல தொடக்கம் சிலாபம் வரையான வீதியின் ஆரம்பகட்ட வேலைக்காக செயற்திட்டத்தினால் ஏற்பட்ட ருபா 91.23 மில்லியன் தொகை பலனற்றதாக ஆனது அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தொகையுடன் உடன்பாடு. | நட்டத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவுகள் போன்றவற்றிற்காக மொத்தமாக ரூபா 91.23 மில்லியன் செலவிட்டதன் பின்னர் 2018 ஒகஸ்ட் 15 இல் இடம்பெற்ற அமைச்சரவை அமைச்சர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும் புதிய வேலையின் பரப்பெல்லையின் கீழ் விபரமான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட கடன் வழங்கும் முகவரின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவும்மில்லை. மேலும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான வேலைகளின் பௌதீக செயலாற்றலினை அளவிடுவதற்காக எத்தவிதமான பதிவேடுகளும் செயற்திட்டத்தினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், கடன் உடன்படிக்கையில் செய்து கொள்ளப்பட்ட ரூபா 18,125 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 125 மில்லியன் (எஸ்.டி.ஆர் 90.5 மில்லியன்) ஒதுக்கீட்டில், ரூபா 14,500 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 100 மில்லியன் மாகாண வீதிகளின் சீர்திருத்தத்திற்காக மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சிற்கு அதனுடன் மாற்றப்பட்டிருந்தது. மேலும், மீதமுள்ள மிகுதியில், ரூபா 2,175 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 15 மில்லியன் மாத்திரமே செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை தொடர்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் | செயற்திட்டத்தின் புதிய மீள்கட்டமைப்பின் விளைவாக வேலைகளின் பெறுமதியானது ரூபா 18,125 மில்லியனிலிருந்து ரூபா 2,175 மில்லியனாக குறைவடைந்து காணப்பட்டது. | கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தொகையுடன் உடன்பாடு | ஓட்டுமொத்த திட்டம், செயல் நடவடிக்கைத்திட்டம், கொள்முதல் திட்டம் மற்றும் செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்கள் என்பன செயற்திட்டத்தின் புதிய வேலை நோக்கெல்லையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ரூபா 1,232.50 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 8.5 மில்லியன் வீதி பராமரிப்பு நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் 2016 ஜுன் 30 இல் செயற்திட்டுத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 96.97 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | | | |
| (இ) | 2018 சனவரி 11 இல் கடன்வழங்கும் முகவரினால் வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 236.13 மில்லியன் தொகையில் செயற்திட்டமானது ரூபா 16.58 மில்லியனை மாத்திரமே மீளாய்வாண்டில் பயன்படுத்தியிருந்தது. மிகுதித் தொகை ரூபா 252.14 மில்லியன் செயற்திட்டத்தின் சார்பாக மத்திய வங்கியினால் பராமரிக்கப்படும் விசேட டொலர் கணக்கில் செலவிடப்படாத மிகுதியாக காணப்பட்டது. | வழங்கப்பட்ட கடன் தொகை ரூபா 252.14 மில்லியன் ஒரு வருடத்திற்கு மேலாக பயனற்றதாக காணப்பட்டது. | செயற்திட்டத்தின் நோக்கெல்லையை மீள்கட்டமைப்பதற்கு முன் ரூபா 236.16 மில்லியன் எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக செயற்திட்த்தின் நடவடிக்கைகள் முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |